

தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவுக்கு ஆதரவாக அலங்கியம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கடற்கரை ராஜ், ராஜபாளையம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் தங்கபாண்டியன் ஆகியோருடன் இணைந்து வீதி, வீதியாக இல்லம்தோறும் மக்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் பெஸ்ட் நகர் தேவாலயத்தில் திருச்சபை மத போதகர்களிடம் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு. பெ.சாமிநாதன் ஆதரவு திரட்டினார். இதில் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் வழக்கறிஞர் கலை செழியன், மாவட்ட துணை அமைப்பாளர் ஜான் பிரகாஷ், மாவட்டப் பிரதிநிதி எஸ்.எம்.யூசுப் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் நகரப் பகுதிகளில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் இன்ப ரகு, நகர கழக செயலாளர் எஸ். முருகானந்தம், நகர்மன்ற தலைவர் கு.பாப்புகண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ். சுகன்யாவை ஆதரித்து புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் ஊத்துபாளையம் பகுதி பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் மாவட்ட துணை செயலாளர் எஸ்.எஸ்.கருப்பையா, ஒன்றிய செயலாளர்கள் சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர். ஸ்டாலின், தலைமை கழக இளம் பேச்சாளர் தமிழினியன், ராகவன் ஆதிமூலம், அண்ணாதுரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் நகரப் பகுதிகளில் கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர்கள் கே.இ.பிரகாஷ் எம்பி, இன்பா ரகு, தர்மபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் ஆ.மணி எம்பி, நகர செயலாளர் எஸ்.முருகானந்தம், நகர் மன்ற தலைவர் கு.பாப்புகண்ணன் ஆகியோர் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைபடி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் வழிகாட்டுதலுடன் குண்டடம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட சூரியநல்லூர் ஊராட்சியில் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர், நகர கழக செயலாளர் குட்டி (எ) ஆ.சுதாகர் தலைமையில் கழக நிர்வாகிகளுடன் இணைந்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.வின் மாமியார்

பிரேமா ராஜகுமாரி அம்மையார் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, செப். 30 -

திருவாரூர் மாவட்டக் கழகச்செயலாளரும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி.கே. கலைவாணன் அவர்களின் மாமியார் பிரேமா ராஜகுமாரி அம்மையார் (82) அவர்கள் 27.09.2026 ஞாயிறு அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பிரேமா ராஜகுமாரி அம்மையாருக்கு கென்னடி, ராஜராஜன் என்கின்ற இரு மகன்களும், நளினி, ரஷ்யா, சிந்தனை, இந்திரா ஆகிய நான்கு மகள்களும் உள்ளனர்.

பிரேமா ராஜகுமாரி அம்மையாரின் மறைவு தகவலறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

மதுராந்தகம் தொகுதியில் இ.பரந்தாமனை ஆதரித்து

கழக இலக்கிய அணியினர் தீவிரப் பிரச்சாரம்!

நந்தனம் நம்பிராஜன் தலைமையில் வாக்கு சேகரிப்பு!

மதுராந்தகம், செப். 30 -

மதுராந்தகம் தொகுதியில் இ.பரந்தாமனை ஆதரித்து தி.மு.க. தலைமை இலக்கிய அணி இணைச் செயலாளர் நந்தனம் நம்பிராஜன் தலைமையில் மதுராந்தகம் இடைத்தேர்தலில் வாக்கு சேகரிப்பு பணி நடைபெற்றது.

மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் மதசார்பற்ற முற்போக்குக் கூட்டனியின் கழக வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமனை ஆதரித்து தி.மு.க. தலைமை இலக்கிய அணி சார்பில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் மற்றும் ஒன்றிய கழகச் செயலாளர் டிவி கோகுலக் கண்ணன் ஆகியோரின் ஆலோசனைப்படி அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியம் மோகல்வாடி ஊராட்சி பாகம் எண் 156 மற்றும் எலப்பாக்கம் ஊராட்சியில் வீடு வீடாகச் சென்று மாநில இணை செயலாளர் நந்தனம் நம்பிராஜன் தலைமையில் துண்டுப் பிரசுரம் வழங்கி வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் கலியுக கண்ணன், ஒன்றிய நிர்வாகி முகமது அலி, சென்னை தென் மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் சா.சண்முகநாதன், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கொரஞ்சூர் எஸ்.முனுசாமி, கிளை கழக செயலாளர்கள் சே.ராமச்சந்திரன், அழகேசன், முரளி, ஜெயசீலன், இளைஞர் அணி பாபு, சதீஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த வாக்கு சேகரிக்கும் பணியில் மகளிர்களும் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் அணிச் செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில், தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமது சகி முன்னிலையில் அத்திவாக்கம் சுன்னத் ஜமாஅத் ஜாமியா மஸ்ஜித், பள்ளிப்பேட்டை மஸ்ஜிதே முகமது இப்ராஹிம் பள்ளிவாசல், மஸ்ஜிதே வாலாஜா ஜாமிஆ மஸ்ஜித் சுன்னத் ஜமாஅத் – கடப்பேரி பள்ளிவாசல், டவுன் ஜாமிஆ மஸ்ஜித், மஸ்ஜித் வாலாஜா – கடப்பேரி, நவாப் ஜாமிஆ மஸ்ஜித்– கருங்குழி, ஜாமிஆ மஸ்ஜித் – படாளம், ஜாமிஆ மஸ்ஜித்–சூனாம்பேடு முதலிய பள்ளிவாசல் நிர்வாகிகளை சந்தித்து கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனுக்கு ஆதரவாக வாக்குகளை சேகரித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மதுவை அ.துரை

செப்டம்பர் 30 (2020)



தனது இளமைப் பருவம் தொட்டே கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

தென்சென்னை மாவட்டம், சைதை பகுதிக் கழகச் செயலாளராகவும், பகுதி அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.